ஹல்தும்முல்ல பிரதேச சபை
பதுளை மாவட்டம்

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2014 மே 30 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 17 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை சபையின் தலைவருக்கு 2014 ஒக்டோபர் 20 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 கணக்காய்வு அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கங்களைத் தவிர, நிதிசார் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன. என்றும், 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹல்தும்முல்ல பிரதேச சபையின் நடவடிக்கைகளது, நிலைமை மற்றும் முடிவுற்ற அவ்வாண்டிற்கான அதன் செயற்பாட்டினது நிதிசார் விளைவுகள் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றினது உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலையைக் காட்டுகின்றன. என்பதும் எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

மீளாய்வாண்டிற்கெனத் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) சபை தயாரித்திருந்த பேரேட்டுக் கணக்கின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிதியக் கணக்கினது செலவு மீதி ரூபா 13.173,433 ஆகும். ஆனால், அத்தினத்தில் உள்ளவாறான ஐந்தொகையில் அது ரூபா 6,756.186 ஆகக் காட்டப்பட்டதனால் ரூபா 6,417,247 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ஆரம்ப கடன்பட்டோர் மீதியிலும் கூடுதலாக முன்னைய ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டில் பெறப்பட்ட ரூபா 1,299,038 முத்திரைக் கட்டணம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படாது கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. ஆகவே, டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதி அதேயளவு தொகையால் நிதிசார் கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) சபையால் பெறப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணப் பட்டோலையின் பிரகாரம் நீதிமன்றத் தண்டப் பண வருவாய் ரூபா 2,737,338 ஆகும். ஆனால், அது வருமான செலவினக் கணக்கில் ரூபா 443,267 சய மீதியாகக் காட்டப்பட்டிருந்தது. ஆகவே, ஆண்டிற்கான வருவாய் ரூபா 3,180,605 குறைவாக நிதிசார் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நீதிமன்றத் தண்டப்பண வருவாய் நிலுவை ரூபா 3,400,606 ஆகும். இது ரூபா 220,000 ஆகக் கணக்கிலிடப்பட்டதால்

நிதிசார் கூற்றுக்களில் கடன்பட்டோர் ரூபா 3,180,606 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் கடன் கணக்கு மீதி ரூபா 1,338,982 ஆகும். இது வருவாய் கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்டதால், நிதிசார் கூற்றுக்களில் இதேயளவு தொகையால் வருவாய்க் கடன்பட்டோர் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மூலதனத்திற்கான வருவாய்ப் பங்களிப்புக் கணக்கு மீதியானது நிலையான சொத்துக்களுக்கு ஈடாக இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும், மூலதனத்திற்கான வருவாய்ப் பங்களிப்புக் கணக்கு மீதி ரூபா 12,605,329 ஆகவும் நிலையான சொத்துக் கணக்கு மீதி ரூபா 28,225,699 ஆகவும் இருந்ததால் ரூபா 15.620,370 வேறுபாடு நிலவியது.

(எ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய தெகை ரூபா 1,666.192 ஆகும். ஆயினும், கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 11,352 க்கான நிதியேற்பாடு மாத்திரமே மேற்கொள்ளப்பட்டதால் நிதிசார் கூற்றுக்களில் பொறுப்புகள் ரூபா 1,654,840 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) ஆண்டிற்கான ரூபா 1,061,400 நிலையான வைப்பு மீதான வட்டி வருவாய் ரூபா 34,548 ஆகும். 6,821,339 ஆம் இலக்கக் கணக்கில் முதலீடு செய்யப்பட்ட இது கணக்கில் சேர்த்தக் கொள்ளப்பட்டிராதபோதும், நிலையான சொத்துக்களது ஆரம்ப மீதியில் சேர்த்தக் கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும், இது திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைக்கப்படாதிருந்தது. ஆகவே, திரண்ட நிதியத்தின் மீதி நிதிசார் கூற்றுக்களில் இதேயளவு தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| கணக்கீட்டு விடயம் | ஐந்தொகையின் படியான மீதி, 2013.12.31 இல் உள்ளவாறு | பட்டோலையின் பிரகாரம் | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| பொறித் தொகுதியும் இயந்திரமும் | 3,020,271 | 2,942,021 | 78,250 |
| மோட்டார் கார்களும் வண்டிகளும் | 13,628,525 | 12,223,525 | 1,405,000 |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 1,601,218 | 1,547,968 | 58,250 |
| தீர்வையும் வரியும் | 328,746 | 335,194 | 6,448 |

### 1.3.4 தொங்கற் கணக்கு

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதிக்கமைய, தொங்கற் கணக்கில் இருந்த ரூபா 9,522,220 செலவு மீதியானது ஐந்தொகையில் உள்ளடக்கப்படாதிருந்தது.

### 1.3.5 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகளது மீதிகள் முறையே ரூபா 10,480,133 மற்றும் ரூபா 20,852,906 என்பனவாகும்.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

பெறுமதிகளை உள்ளடக்கிய பட்டோலைகள், உரித்துறுதிகள், திட்டங்கள், மீதிகளது உறுதிப்படுத்தல்கள் என்பன சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 22,418,549 பெறுமதியான 5 கணக்கீட்டு விடயங்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. விபரம் வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | நிதிப் பிரமாணம் 371 | 1994 முதல் 2013 வரை 16 சந்தர்ப்பங்களில் பல நபர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 272,301 முற்பணமானது தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையினது XXIV அத்தியாயத்தின் 04 ஆம் பிரிவு | சபையில் பணியாற்றி, பின்னர் வெளியேறிய ஊழியர் ஒருவருக்கு ஊழியர் கடனாக வழங்கப்பட்ட தொகை ரூபா 26,920 ஆகும். 2005 ஆம் ஆண்டு முதல் இது அறவிடப்படாதிருந்தது. |
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 டிசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்கச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 26 கடைகளது மாதாந்தக் குத்தகை வாடகை பிரதான விலை மதிப்பீட்டாளர் அல்லது உள்ளூராட்சிச் சேவையைச் சேர்ந்த மதிப்பீட்டாளர் ஒருவரால் மதிப்பிடப்பட வில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,172,420 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 510,186 ஆகும். இது நிதிசார் விளைவுகளில் ரூபா 1,662,234 சாதகமான வேறுபாட்டைக் காட்டுகின்றது.

**2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு**

நிதிசார் விளைவுகளின் தேறிய அதிகரிப்பு குறித்த பகுப்பாய்வுடனான மீளாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| **மீண்டுவரும் வருவாய்** | **2013** | **2012** | **வேறுபாடு** | |
|---|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| தீர்வையும் வரியும் | 1,813,496 | 1,548,996 | 264,500 | |
| வாடகை | 924,101 | 840,720 | 83,381 | |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 796,350 | 743,340 | 53,010 | |
| சேவைக் கட்டணம் | 6,066,102 | 2,433,104 | 3,632,998 | |
| பிடி ஆணைக் கட்டணமும் தண்டப் பணமும் | (351,634) | 1,100,028 | (1,451,662) | |
| ஏனைய வருவாய் | 248,655 | 276,738 | (28,083) | |
| வருவாய்க்கான உதவி | 14,156,693 | 12,876,062 | 1,279,631 | 3,833,775 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| சம்பளங்களும் படிகளும் | 17,443.456 | 15,198,400 | (2,245,056) | |
| பயணச் செலவினம் | 324,278 | 341,658 | 17,380 | |
| வழங்கலும் உபகரணமும் | 1.662,681 | 1,856,637 | 193,956 | |
| மூலதனச் சொத்துப் பழுதுபார்ப்பும் பராமரிப்பும் | 693,385 | 442,494 | (250,891) | |
| போக்குவரத்தும் பயன்பாட்டுச் சேவைகளும் | 433,891 | 442,726 | 8,835 | |
| வட்டி, பங்கிலாபம், மிகையூதியக் கொடுப்பனவு | 621,436 | 687,884 | 66,448 | |
| உதவிப் பணம், உதவு தொகை நிவாரணத் தொகை | - | 80,627 | 80,627 | |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன் பணிக்கொடை | 301,218 | 258,378 | (42,840) | 2,171,541 |
| | | | | 1,662,234 |

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 கடை வாடகை**

(அ) சபைக்குச் சொந்தமான 26 கடைகளில் 24 கடைகளினது குத்தகை வாடகை நிலுவையாக 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறிருந்த தொகை ரூபா 135,712 ஆகும்.

(ஆ) முன்னைய ஆண்டுகளில் கடைகளை வாடகைக்குப் பெற்றிருந்த குத்தகையாளர்களிடமிருந்து ரூபா 541,672 குத்தகை வாடகை வருமதியாகவிருந்தது. 5 கடைகளுக்கான மின் கட்டணமாகிய ரூபா 40,692 சபையால் தீர்த்து வைக்கப்பட்டபோதும், குறித்த குத்தகையாளர்களிடமிருந்து அது அறவிடப்படாதிருந்தது.

### 2.3.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை பின்வருமாறு.

| | ரூபா |
|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணம் | 220,000 |
| முத்திரைக் கட்டணம் | 1.065,000 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) கொஸ்லந்த வர்த்தக பல்கூட்டுத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 5,000,000 கடன் மீதான வட்டியாக ரூபா 1,829,499 மற்றும் கடன் தவணைப் பணமாகிய ரூபா 760,192 என்பன 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 4 ஆண்டுகள் கடந்தும் இவ்வர்த்தகப் பல்கூட்டுத் தொகுதியின் நிர்மாண வேலை முடிவுறாதிருந்தது. இதன் காரணமாக, வாடகை வருவாயாகப் பெறக்கூடியதாக இருந்த தொகையையும் பெற முடியாது போனதுடன் சபையின் நிதியிலிருந்து வட்டி செலுத்தப்படுவதால் சபையின் நிதி நிலைமையில் தாக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்பும் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஜனவரி 18 ஆந் திகதிய 1794 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் IV(ஆ) பகுதியின் பிரகாரம், சபை பிரதேசதத்தில் நிறுவப்பட்டுள்ள நிரந்தர விளம்பரப் பலகைகளிலிருந்து சதுர அடிக்கு ரூபா 50 சதவீதம் வருடாந்தக் காட்சிக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். ஆயினும், கொழும்பு - பதுளை பிரதான வீதியில் நிறுவப்பட்டுள்ள ‘‘கொமர்ஷல் கிறெடிட்’’எனும் 600 சதுரஅடி விளம்பரப் பலகை (20’X30’) தொடர்பாக 2013 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 30,000 அறவிடப்படாதிருந்தது.

### 3.2 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதுமான சொத்துக்கள்

பின்வரும் சொத்துக்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

(அ) யுத்தத்தின்போது இராணுவத்தால் 1996 ஆம் ஆண்டில் எடுத்துச் செல்லப்பட்டு 2009 ஆம் ஆண்டில் திருப்பி வழங்கப்பட்ட 53-5065 இலக்க கெப் வண்டி

(ஆ) 2004 ஆம் ஆண்டின்போது ஜோன்டியர் டிறக்டறுடன் பெறப்பட்ட உழவியந்திரம்

(இ) இரண்டு சந்தர்ப்பங்களில் 252-6369 இலக்க கெப் வண்டியிலிருந்து அகற்றப்பட்டிருந்த 2 இயந்திரங்கள்

## 4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

சபையால் தயாரிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் உள்ள வருமான, செலவினம் மற்றும் உள்ளவாறான வருமான, செலவினம் என்பவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. ஆகவே, வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை.

| மீண்டுவரும் வருவாய் | வரவு, செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ளவாறானது | வேறுபாடு | வேறுபாட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| தீர்வையும் வரியும் | 1,497,664 | 1,873.496 | 315,832 | 21 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 596,500 | 796,350 | 199,850 | 33 |
| சேவைக் கட்டணம் | 2,837,500 | 6,066,102 | 3,228,602 | 114 |
| ஏனைய வருவாய் | 314,500 | 248,655 | 92.845 | 27 |

| மீண்டுவருஞ் செலவினம் | | | | |
|---|---|---|---|---|
| மூலதனச் சொத்துப் பழுதுபார்த்தலும் பராமரிப்பும் | 478,500 | 693,385 | 214.885 | 45 |
| போக்குவரத்தும் பாவனைச் சேவைகளும் | 344.500 | 433,891 | 89,391 | 26 |
| உதவிப்பணம், உதவுதொகை, நிவாரணத் தொகை | 11,500 | - | 11,500 | 100 |
| ஓய்வூதியம், ஓய்வூதிய நலன், பணிக்கொடை | 343.890 | 301,218 | 42,672 | 12 |

**5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்த முகாமைத்துவம்